Registered No. M. 2330

'SIDDHANTHAM
Vol. 33—No. 4

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கட னடியேனையுந் தாங்குதல்
என்கட னுன்பணி செய்து கிடப்பதே'

மலர் 33 | சார்வரி சித்திரை 1960 ஏப்ரல் | இதழ் 4

உள்ளுறை



| | பக்கம் |
|---|---|
| ஞானமிர்தம் ... | 97 |
| ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களின் தினநியமம் ... | 105 |
| அபிராமி அந்தாதி ... | 107 |
| திருப்பாலைவனம் ... | 115 |
| நல்ல யாத்திரை ... | 119 |
| கடவுளால் முடியாத காரியம் ... | 123 |



பத்திராசிரியர் : புலவர் முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

உதவிப் பத்திராசிரியர் : மு. நாராயணசாமி

சைவ சித்தாந்த மகா சமாஜம்
14, வாரன் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4

ண் ... ரூபா 3 தனிப்பிரதி அணா

அம்பத்து ... பாய்... 7

## சமாஜச் செய்தி

**திருமயிலைத் திருவிழாச் சொற்பொழிவுகள் :** சென்னை, திருமயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலில் நடக்கும் பிரம்மோத்சவத்தின்போது நமது சமாஜத்தின் சார்பில் வெள்ளீசுவரர் கோயிலில் 5–4–60 முதல் 11-4-60 வரை நாள்தோறும் மாலை 7 மணிமுதல் திரு. ஜி. கலியாணம் பிள்ளை, எம்.ஏ., வித்வான் - திரு அம்பை - சங்கரனார், திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார், பி.ஏ., பி.டி., திரு. ச. சிவகுமாரன், எம்.ஏ., திரு. செ. சுந்தரன், திரு. ஜி. வடிவேலாயுதம், எம்.ஏ., திரு. சி. என். சிங்காரவேல் முதலியார், எம்.ஏ. முதலியோர் முறையே 'நால்வர் நன்னெறி', 'வெள்விடைப் பாகர்', 'பிரணவப் பொருள்', 'திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள்', 'திருமுறைகள்', 'பிட்சாடனர் திருக்கோலம்', 'திருத்தொண்டர்' என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

---

## செய்திச் சுருக்கங்கள்

**வாலாஜாபாத் இந்துமத பாடசாலை :** சென்னை மாகாணக் கூட்டுறவுத் துறைப் பதிவாளர் உயர்திரு. வி. பாலசுந்தரம், ஐ.ஏ.எஸ். அவர்கள், 15–3–60 அன்று வாலாஜாபாத்திற்கு வருகை புரிந்து, இங்கு 44 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இந்துமத பாடசாலையையும், அதன் சார்பிலுள்ள வள்ளலார் மாணவர் இல்லத்தையும், திருவள்ளுவர் தொழிற்சாலையையும் பார்வையிட்டார். மாணவர்களின் உடம்பு, உள்ளம், அறிவு, ஆன்மா ஆகியவைகளுக்குச் சிறந்த பயிற்சி கொடுத்துவரும் பாடசாலையைப் பதிவாளர் அவர்கள் பெரிதும் பாராட்டினார்கள்.

**மாதாந்திர சமயப் பிரசாரக் கூட்டம்:** சென்னை, தியாகராயநகர்த் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் 3–4–60 ஞாயிறன்று திருவாலங்காட்டில் சிறப்புற நிகழ்ந்தது. வழக்கம்போல, இராயப்பேட்டைப் பாலசுப்பிரமணிய பக்தஜன சபையினரும், சைவ சித்தாந்த மகா சமாஜத்தினரும், [illegible] கம்பெனி திரு. மாசிலாமணி முதலியார், சாரதி பிலிம்ஸ் மா[illegible]

Reg. M. 2330

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வானியைஉள் நாடு

| மலர் 33 | சார்வரி சித்திரை 1960 ஏப்ரல் | இதழ் 4 |
|---|---|---|

## ஞானமிர்தம்

(முருகவேள்)

(மலர்-33; இதழ்-3; 71-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞானிகளின் சிறந்துயர்ந்த நலத்தை ஞானமிர்தம் பின்வருமாறு சுவைமிக நவிலுகின்றது : செஞ்சாந்து எறியினும் செதுக்கினும் போழினும் நெஞ்சு ஓர்ந்தோடா நிலைமையர் ஞானிகள். களிப்பும் கலுழ்ச்சியும் அவர்கள்பாற் காணப்படா. ஞானிகட்கு ஓரோவழிக் கலுழ்ச்சி யுண்டெனின், அது தமக்குத் "தீங்கு செய்தோர் நீங்கா நிரயத்து அழுந்துதற்கு ஏதுவாயினமே" என நெஞ்சம் அழிந்து பரிவுறுவதேயாகும்.(40).

ஞானியர் இயல்பு

மந்திர வலிமையும் மருந்தின் ஆற்றலும் வாய்த்தவர்பால் பாம்பின் நஞ்சு ஊறு பயவாதவாறு போலவும், தாமரையின் இலையில் தண்ணீர் படியாத தன்மைபோலவும், உப்புக் கடலில் தோன்றி யுலவி வாழ்ந்தபோதிலும் மீன்கள் உப்புடன் ஒன்ருத தன்மைபோலவும், உலகியலுணர்வு ஞானிகளை ஒரு சிறிதும் பற்றுவதில்லை.

" ஞான மாக்கழல் மாணுற வீக்குநர்
விடய வேலைத் தடையின்று படியினும்
தீதொடு படியுநர் அல்லர்
மாதுயர் கழியுநர் நீதி யானே."44

அஃது எங்ஙனமெனின், ஞாயிறு தன் கதிர்களால் தூய பொய்கை நீரையும் தூய்தல்லாத சகதி நீரையும் ஒருங்கே

பருகுமாயினும், அதற்கு ஒரு குற்றமும் எய்துவதில்லை; அகில் சந்தனம் முதலிய நறுமணங்கமழும் மரங்களையும், காஞ்சிரம் காஞ்சொறி முதலிய நச்சுச் செடி கொடி மர வகைகளையும் ஒருங்கே எரிக்குமாயினும், நெருப்பானது அவற்றால் யாதொரு கெடுதியும் அடைவதில்லை; அங்ஙனமே, அறிவு அனல் கொழுமிய நெறியினோர், விடயங்களில் அழுந்திய வழியும் சுடர்விட் டொளிர்வர் (45). ஞானிகள் நம்மனோரை ஒப்பவே, உடலும் உணவும் உறக்கமும் பிறவும் உடையராகக் காணப்படினும், உலகியற் பொருள்களை ஞானிகள் நுகரும் முறைக்கும் நம்மனோர் நுகரும் முறைக்கும் இடையே மிகப் பெரிய வேறுபாடுண்டு. ஒருவன் தனது மகளைத் தழுவுங்காலும் மனைவியைத் தழுவுங்காலும் எய்தும் மன நிலைகள் தனித்தனி வெவ்வேறானவை; தனது தனங்களைக் குழந்தை தைவரும்போதும் கணவன் வருடும்போதும், ஒரு மாதரார் எய்தும் உணர்வு நிலைகள் அறவே வேறுபட்டவை. இவற்றைப்போலவே, அறங்கரை நாவின் ஆன்றோர் உள்ளமானது உலகியற் பொருள்களை நுகருங்கால், நம்மனோர் உள்ளங்கள்போல இழிந்து செல்லாமல், சிறந்துயர்ந்த செவ்விபெற்றுத் திகழும் (42). ஞானியர் தம் விளக்கும் அழகிய அரிய இக்கருத்தினை வியந்து, ஆசிரியர் சிவஞான சுவாமிகளின் அரும்பெறல் மாணவராகிய கச்சியப்ப முனிவரர்,

> " முப்பொருள் இயல்பும் உள்ளவா றுணர்ந்து
> முழுத்தபே ரறிவினுள் விழித்தோர்,
> இப்புவி யவர்போல் வினைபல குயிற்றி
> இருப்பினும் வினைப்பயன் எய்தார்!
> கைப்பட மனையைப் புதல்வியைத் தழூஉங்காற்
> கருத்துவேற் றுமையும்,கை வருடச்
> செப்பிள முலையார் மகன்பதிக்கு அளிக்கும்
> பயத்தின்வேற் றுமையும்,ஒன் றன்றே!"

என வரும் தணிகைப் புராணப் பாடலுள் விதந்தெடுத்துப் போற்றி அமைத்திருத்தல், அறிந்து மகிழ்தற் குரியது.

ஆசிரியர் மெய்கண்டார் பெருமானின் காலத்திற்கும் (கி. பி. 1232), சிறிது முன்னர் இயற்றப் பெற்றதெனக்

கருதப்படும் ஞானமிர்தம் (கி. பி. 1185) என்னும் இந் நூலில், சிவஞானபோதம் சிவஞான சித்தியார் சிவப்பிர காசம் என்னும் மெய்கண்ட நூல்களின் சொற்பொருட் கருத்துக்கள், ஆங்காங்கே அமைந்து செறிந்து கிடந்து விம்மிதம் விளைக்கின்றன. 'தாலிபுலாகநயம்' பற்றி ஈண்டு அதற்குரிய ஒரு சில சான்றுகளை மட்டுமே கண்டு அமை தல் சாலும் : "நெல்லிற்குமியும் நிகழ் செம்பினிற் களிம்பும் சொல்லிற் புதிதன்று தொன்மையே" எனவரும் சிவஞானபோதக் கருத்து,

மெய்கண்ட நூலின் சொற்பொருட் கருத்துக்கள்

> " பொறிதீர் புற்கலன் விழுமலம் புணர்தற்கு
> அற்றே சொற்றது அனுதி!..."9

> " பேணிற் செம்பிற் பெருகிருந் துகள்என
> அறிவினை மறைத்தல் அணிமலம்..."18

எனவரும் ஞானமிர்த வரிகளில் அமைந்துள்ளது. "மாயா தனுவிளக்கா மற்றுள்ளம் காணுதேல் ஆயாதாம் ஒன்றை" எனச் சிவஞானபோதமும், "போதகாரியம் மறைத்து நின் றது புகல் மலங்காண்...காதலால் அவித்தை சிந்தத்தரும் கலைபாதி மாயை. ஆதலால் இரண்டும் சோதி இருள்என வேறும் அன்றே !" எனச் சித்தியாரும், "புகலும் மலம் ஒழித்தற்குக் கலாதிமுதல் மாயை பொருந்தியிடும்...அருளை மலம் உயிர்கள் சாராமல் மறைக்கும். இகலிவரும் இவை யுணரின் இருள்வெளியாந் தன்மை எய்தும்" எனச் சிவப் பிரகாசமும் கூறும் கருத்தை,

> " மறைத்தற் றெழில்பூண் பதுவும், அதனைக்
> குறைத்தற் கெய்திக் குலவுவ(தும்) ஒரிடை
> இரண்டல என்பதென்? இருள்-இருள் இரிசுடர்
> முரண்தர நின்ற முழுமலம், மாயை." 18

என ஞானமிர்தம் நன்கினிது விளக்குகின்றது. இங்ஙனமே, "முத்தொழில் செய்யும் இறைவன் உருவுடையனுதல் வேண்டும், உடம்பின்றி வினைசெய்தல் கூடாமையான்" என் பாரை மறுத்து, "நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்

தில் தாக்காது நின்று ... இறைவன்" எனச் சிவஞான போதமும்,

"ஞாலமே மீனையும் தந்து நிறுத்திப்பின் நாசம் பண்ணும்
காலமே போலக் கொள் நீ நிலைசெயல் கடவுட் கண்ணே"

எனச் சித்தியாரும் கூறுவதனை,

"அறிமதி! காலம் அமூர்த்தம், உறுபலம்
தரும்.அது போலத் தலைவன், மூர்த்தத்
திரிபினன் ஆயினும், இன்தொழில் பொருவுஇரி
இச்சையின் இயற்றும்."62

என ஞானமிர்தம் நவிலுதல் காணலாம். இவ்வாறே, "வள்ள லாற் பொன்வாள் அலர்சோகம் செய்கமலத்து ஆம்" எனச் சிவஞானபோதமும், "சாற்றிய கதிரோன் நிற்கத் தாமரை அலரும். காந்தம் கான்றிடும் கனலை. நீரும் காந்திடும் காசினிக்கே" எனச் சித்தியாரும், "எல்லாம் வருவிப்பன் விகாரங்கள் மருவான். வானின் முந்து இரவி எதிர் முளரி அலர்வுறும் ஒன்று, அலர்வான் முகையாம் ஒன்று, ஒன்று உலரும் முறையின் ஆமே" எனச் சிவப்பிரகாசமும் ஆகிய வற்றில் முறையே உணர்த்தப்படும் அரிய கருத்து,

"அடையான் விகாரம் ஆயினும் சுடரவன்
சுடர்வீழ் தாமரைத் தோடுஇனிது அலர்த்தவும்,
மற்றவை குவிப்பவும், உலர்த்தவும் கொற்றக்
கிரணத் ததுஎன, அரணமில் கூற்றின்
முரண்தொலை ஒருவனும், முரியாச் சத்தியின்
அண்டர் அண்டம்மற்று எண்தரல் இடைவ
செய்தற் கண்ணும் திரிவிலன்"63

எனவரும் ஞானமிர்தப் பகுதியிற் புலப்படுத்தப் பெற்றுளது. "பண்ணையும் ஓசையும் போலப் பழமும் அதுவும் எண்ணும் சுவையும்போல் எங்குமாம் அண்ணல்தாள்" எனச் சிவஞானபோதம் விளக்கிக் கூறும் பதிப்பொருளின் அத்து வித வியாபகத் தன்மையை,

"இன்ன தன்மையன் எனையன்? என்றினிது
அன்னேற் றேரின், அம்ம! மின்னவிர்
பதும ராகப் புதுவெயில், நீழல்செய்
மதியிற் றண்மை, ஞெலிகோல் வன்தழல்,

மடநடை நல்லான் வனமுலை வந்த
பாலில் தீநெய், பழத்தின் இன்சுவை,
பூட்சி ஆருயிர், பொருள்உரை, எள்நெய்,
கடிமலர் கஞலிய முடியா வாசம்,
விம்மிதம் என்னென்று இசைக்குவம் மற்றே?
நிலம்நீர் தீகால் வெளிஉயிர் யாவும்
அவையே தான், அவை தானே யாகி
விரவியும் விரவா வீரம்..."56

என ஞானமிர்தம் பாராட்டி நவில்கின்றது. இம்மட்டோ! "அங்கித் தம்பனை வல்லார்க்கு அனல் சுடாதாகும். ஔடதம் மந்திரங்கள் உடையார்க்கு அருவிடங்கள் ஏறா. எங்கித்தைக் கன்மமெலாம் செய்தாலும் ஞானிக்கு இருவினைகள் சென்றணையா." எனவும், "உரியமலம் ஔடதத்தால் தடுப்புண்ட விடமும், ஒள்ளெரியின் ஒளி முன்னர் இருளும், தேற்றின் வருபரல்சேர் நீர்மருவு கலங்கலும்போல் ஆகிமாயாதே தன்சத்தி மாய்ந்து...தேயும்" எனவும் சித்தியார் கூறும் உண்மையினை,

"மாமலை யன்ன மரந்தெறும் கடுங்கனல்
தாமரை யன்ன தளிர்க்கை தாங்கினும்
மந்திர மாக்கட்கு அந்தரம் யாதே?
விடங்கெழு பெருவலி யுளங்கொள் மந்திரத்து
அடங்கிய தன்மையும் அற்றே! குடங்கர்க்
கலங்குநீர் இல்ல நலங்கிளர் விழுக்காழ்
துணைந்த மாறென இணங்கிறந் தகன்ற
பாசப் பெருவலி தடுத்தனர்!"52

என ஞானமிர்தமும் நலந்திகழத் தெளிவித்துள்ளது.

முனிவரரின் சில உரைப் பகுதிகளுக்கு மூலங்கள்

இனி இவைபோல்வனவே யன்றி, ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தமது பேருரை சிற்றுரைகளில் உரைநடைப் படுத்து வரைந்தனபோலக் காணப்பெறும் ஞானமிர்தப் பகுதிகளும் பலவாகும். முனிவரரின் சில உரைப்பகுதிகளுக்கு மூலங்கள்போல ஞானமிர்தப் பகுதிகள் சில ஆங்காங்கே காணப்படுகின்றன:

"இஃது இவ்வாறாக என எண்ணுதலாகிய சங்கற்ப மாத்திரையாற் செய்வதூஉம், காரணத்தாற் செய்வதூஉம் என

வினை முதல் இரு வகைப்படும். குயவன் கரணத்தாற் செய்வ தன்றிச் சங்கற்ப மாத்திரையாற் செய்யமாட்டான். இறைவன் சத்தி அவ்வாறன்றிச் சங்கற்ப மாத்திரையான் எல்லாத் தொழிலும் செய்யுமாகலின், இறைவன்மாட்டுக் குயவன் எய்தும் குற்றங்கள் இயைதல் இல்லை "

எனவரும் சுவாமிகளின் உரைப் பகுதி,

" பொங்கிய வினைஇரு வகைத்து, சங்கற்
பத்தொடு கரணத்து; அலர்கடம் குலாலன்
எற்படு சங்கற் பத்தின் முற்பட
இயற்றலன்; இறைவன் சங்கற் பத்தின்
மயக்கற விந்துவைத் துயக்கறக் கலக்கல்
செய்வன், நோவான்..."60

எனவரும் ஞானமிர்தப் பகுதியினை உட்கொண்டதாதல் உணரற்பாலது. இவ்வாறே,

" ஆன்மாப் பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் பெற்றவழிப் பசுகரணமும் சிவகரணமாயவாற்றான், அவ்வழிப் பசு ஞானத் தோடு ஒப்பப் பாசஞானமும் உப்பளத்தடுத்த பொருள்போலச் சிவஞானமேயாம் என்பது சிவாகம நூற்றுணிபு "

எனச் சுவாமிகள் எழுதியருளியிருக்கும் பேருரைப் பகுதி,

..................." காயல்
உப்புவிளை பழனத்து உற்ற பொற்கோட்டு
உலவையின் அறிக மாதோ
கலைவ லாளர் நிலைபுணர் பண்பே "74

எனப் போதரும் ஞானமிர்த வரிகளை நினைவூட்டி நிற்கின்றன. இவ்வாறே,

"அற்றேல், வினையே அமையும்; இறைவன் வேண்டா வெனின், அற்றன்று; வினையும் மாயைபோலச் சடமாகலிற் கூட்டுவானையின்றி அமையாதென்க. பால் சுரந்து கன்றினை வளர்ப்பவும், காந்தம் இரும்பைவலிப்பவும் காண்டலிற், சடமும் கூட்டுவானையின்றி அமையுமென்பது பொருந்தாது; பால் சுரந்து வளர்க்குமாயின், உயிர் நீங்கிய ஆன் முலையினும் பால் சுரத்தல் வேண்டும். அஃதின்மையிற் சேதனமாகிய ஆவை யின்றி அமையாமை உணர்க. காந்தம் இரும்பை வலித்தலும்

அவ்விரண்டினையும் இயைவிக்கும் சேதனனையின்றி அமையாமை உணர்க"

எனச் சுவாமிகள் தமது பேருரைக்கண் தெளிவுறுத்தி யிருக்கும் செய்தி,

"கன்றுவளர் பாலினும் சென்றின்று, ஈன்கோச்
சேதனம் ஆதலின்; ஓதிய உயிர்போலுஞ்
சுரபி தீம்பால் சொரியின், புரையில்
தீம்பால் வளர்த்தது அன்றுஎன ஓம்பாது
உரையா டுநர்எவர்? வரையா அறிவன்
செயல்என, இரும்பை அயல்அற உய்க்கும்
காந்தம்என்(ற) எடுத்துக் கோளும் வாய்ந்தன்று!
இரண்டையும் இயைக்கும் முரண்தகு சேதனன்;
இன்றுஎனின், அவைசென்று ஒன்ற...!"58

என்னும் ஞானமிர்த வரிகளை உன்னியுணர்ந் தெழுதியதாகும் எனலாம். இன்னோரன்னயவை பலவுள!

முற்றுருவகம் ஞானமிர்த நூலின் பலதிற நலங்களுள், சிவஞான போதம் சிவஞான சித்தியார் போன்ற சிறந்த நூல்கள் குறிப்பாகவும் சுருக்கமாகவும் உணர்த்திச் செல்வனவற்றை, விரிவாகவும் விளக்கமாகவும் சுவைகெழும வகுத்துணர்த்தும் திறமும் ஒன்றாகும்.

"அந்தக் கரணம் அவற்றின்ஒன் றன்று;அவை
சந்தித்தது, ஆன்மாச் சகசமலத் துணராது;
அமைச்சுஅரசு ஏய்ப்பநின்று அஞ்சவத் தைத்தே"

எனச் சிவஞான போதத்தினுள்ளும்,

"படைகொடு பவனி போதும் பார்மன்னன், புகும்போ தில்லில்
கடைதொறும் விட்டு விட்டுக் காவலும் இட்டுப் பின்னர்
அடைதரும் தனியே அந்தப் புரத்தினில்; அதுபோல் ஆன்மா
உடலினில் அஞ்சவத்தை உறும், உயிர் காவல் ஆக."

எனச் சிவஞானசித்தியாருள்ளும் சுருக்கமாகக் குறிப்பிடப் பெற்றுள்ள கருத்தை, ஞானமிர்தம் மேலும் சுவைமிக அழகோங்க விரிவாகக்கூறுகின்றது. சிவஞானபோதம் 'அமைச்சரோடு கூடிய அரசன்' எனவுரைத்து உருவகம் செய்தது; சுருங்க அமைந்த அத்தொகை யுருவகத்தினைப் 'படைகொடு பவனிபோதும் பார் மன்னன்' என்னும் தொடரால் மேலும்

சிறிது விரியுருவகமாக்கி விளக்கியது சித்தியார்; அதனை, மேலும் தொடர்ந்து முற்றுருவகமாகவே முடித்துக் காட்டி விடுகின்றது ஞானமிர்தம் !

ஆன்மா அரசன். உடல் அரண்மனை. புருவநடு திருவோலக்க மண்டபம். கண்டம் நாடக அரங்கு. இருதயம் மந்திராலோசனை மண்டபம். உந்தி அந்தப்புரம். மூலாதாரம் பள்ளியறைக் கட்டில். இவ்விடங்களில் முறையே நிகழும் செயல்கள் நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் (சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம்) என்னும் ஐந்தவத்தைகள். இவ்வவத்தைகளுக்கு முறையே 35, 25, 3, 2, 1 எனக் கருவிகள் தொழிற்படும். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கும் அமைச்சர்கள். காலம் நியதி கலை வித்தை அராகம் என்பன கவசம். நிலம் நீர் தீ கால் வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களும் தேர். மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் அறிகருவிகள் ஐந்தும் முறையே ஒற்றர், சூதமாகதர், தூதுவர், புரோகிதர், மெய்காப்பாளர் ! வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் தொழிற்கருவிகள் ஐந்தும் முறையே குதிரைவீரர், யானை வீரர், தேர் வீரர், காலாட்கள், படைத்தலைவர் ! அறி கருவிகளுக்கு நுகர் பொருளாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன அகப் பரிவாரம். தொழிற் கருவிகளுக்கு நுகர் பொருளாகிய உரை நடை கொடை போக்கு இன்பம் (வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம்) என்பன புறப் பரிவாரம். பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் என்னும் பத்துவகை வாயுக்களும் உறுதிச் சுற்றம் என ஞானமிர்தம் (16), ஏற்றபெற்றி இலக்கியச் சுவையமைய முற்றுருவகஞ்செய்து மொழிந்திருத்தல் அறிந்தின்புறற்பாலது. அன்றியும்,

“ சாக்கிரம் முப்பத் தைந்து நுதலினில்; கனவு தன்னில்
ஆக்கிய இருபத் தைந்து; களத்தினிற் சுழுனை மூன்று;
நீக்கிய இதயந் தன்னில் துரியத்தில் இரண்டு; நாபி
நோக்கிய துரியா தீதம் நுவலின்,மூ லத்தின் ஒன்றே !”

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுட் கருத்தும் ஞானமிர்தத்தின் (16) இப்பாடலில் நயம்பொலிய விளக்கப்பட்டுள்ளமை காணலாம். இத்தகைய சுவைமிகு கருத்துக்கள் பலவற்றை அழகுறத் தெளிவிக்கும் இவ்வரிய நூலை, நம்மனோர் அனைவரும் செவ்விதிற் கற்றுணர்ந்து போற்றிப் பயன் கொள்ளுதல் வேண்டும்!

---

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தின நியமம்

இராத்திரி

3 மணி முதல் 4 மணிவரை சிவத்தியானமுஞ் சிவ மூல மந்திர செபமுந் தோத்திரமுஞ் செய்க.

4 மணி முதல் 5 மணிவரை திருவள்ளுவர் பரிமேலழகருரையும் திருக்கோவையாருரையும் படிக்க.

5 மணி முதல் 6 மணிவரை தந்ததாவனமும் அநுட்டானமுஞ் சிவாலயப் பிரதக்ஷிணமுஞ் செய்க.

பகல்

6 மணிமுதல் 8 மணிவரை Proof பரிசோதிக்க.

8 மணிமுதல் 10 மணிவரை சிவபூசை செய்து போசனம் பண்ணுக.

10 மணிமுதல் 12 மணிவரை சைவசித்தாந்தம் படிக்க.

12 மணிமுதல் 2 மணிவரை புத்தக பரிசோதனஞ் செய்க.

2 மணிமுதல் 4 மணிவரை உரை செய்க.

4 மணிமுதல் 5½ மணிவரை சம்ஸ்கிருதம் படிக்க.

5½ மணிமுதல் 6 மணிவரை உலாவுக.

இராத்திரி

6 மணிமுதல் 6½ மணிவரை அநுட்டானம் பண்ணிச் சிவாலய தரிசனஞ் செய்க.

6½ மணிமுதல் 9 மணிவரை புத்தக பரிசோதனஞ் செய்க.

9 மணிமுதல் 10 மணிவரை புராணவசன மெழுதுக.

10 மணிமுதல் 3 மணிவரை நித்திரை செய்க.

அமாவாசை பௌர்ணிமைகளிலும் பிரதமைகளிலும் சைவசித்தாந்த முதலியவை படித்தலொழித்து அவற்றிற்குரிய நேரத்திலே மற்றைய நூல்கள் வாசிக்க.

சிவாலயப் பிரதக்ஷிணம் செய்யும்போது திருவாசக மனனம் பண்ணுக.

உலாவும்போது சித்தியார் சிவஞானபோதமூல மனனம் பண்ணுக.

ஜன்ம நக்ஷத்திரந்தோறும் விசேஷ பூசை செய்து அட்டோத்திர சத நாமார்ச்சனை பண்ணுக. மாகேசுர பூசை செய்க. சுப்பிரமணிய சுவாமிக்குச் சகச்சிரநாமார்ச்சனை செய்விக்க.

பிரதோஷந்தோறும் தேவார தோத்திரத்தோடு சிவ தரிசனம் செய்க.

கார்த்திகை நக்ஷத்திரந்தோறும் கந்தரலங்கார தோத்திரத்தோடு சுப்பிரமணிய சுவாமி தரிசனஞ் செய்க.

கார்த்திகைச் சோமவாரந்தோறும் சிவசந்நிதியில் நெய் விளக்கிடுக.

சமயகுரவர் நால்வர்க்கும் சேக்கிழார் நாயனூர்க்கும் சந்தானகுரவர் நால்வர்க்கும் திருவள்ளுவ நாயனூர்க்கும் குரு பூசை செய்க.

வருஷந்தோறும் பெரியபுராணம் திருவிளையாடற் புராணம் கந்தபுராணம் உபதேசகாண்டம் கோயிற்புராணம் திருவாதவூரடிகள் புராணம் காசிகாண்டம் இவைகளை நியமமாகப் படிக்க.

நாடோறும் காலையிற் சீரக கஷாயமேனும் நன்னாரிக் கஷாயமேனும் உட்கொள்க. அல்லது சீந்தின்மாவேனும் சிவகரந்தைச் சூரணமேனும் பொற்றலைக்கையாந்தகரைச் சூரணமேனும் வல்லாரைச் சூரணமேனும் உட்கொள்க.

வாரத்துக்கு இரண்டுதரம் தைலாப்பியங்க ஸ்நானஞ் செய்க. கண்ணுக்கு வெண்மிளகிட்ட எண்ணெயிடுக. உள்ளங்கால்களில் வெண்ணெய் தேய்ப்பித்துக்கொள்க.

மாதந்தோறும் முதற்பானுவாரத்திலே பேதி மருந்து உட்கொள்க. முதன்மாசத்துக் கணக்கெல்லாம் முடித்துக் கொள்க.

பக்ஷந்தோறும் *பஞ்சகற்பந் தேய்த்துக்கொள்க.

நாடோறும் பொற்றலைக்கையாந்தகரை நெய் கொண்டு கண்ட சுத்தி செய்துகொள்க. —"சித்தாந்தம்–1936"

---

# அபிராமியந்தாதி†

(தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் - முத்து. சு. மாணிக்கவாசக அடிகள்)

தருமையாதீனத்திலிருந்து திருக்கடவூர்த் திருக்கோயில் வெளியீடாய்க் கார்த்திகைத் திங்கட் கடைச் சோமவாரத்தில் வந்த அபிராமியந்தாதிபுத்துரையில், அதன் முதற் செய்யுளிலும் நூற்பயன் கூறும் பாடலிலும் ஒவ்வொரு சொல்லைப் பற்றித் திரு. மு. அருணாசலம், M. A. அவர்கள் சித்தாந்தம் மலர்-33 ; இதழ் 3இல் தமது கருத்தை வெளியிட்டுள்ளார். அதைக் கண்டோர் முன்னுரையாசிரியர் எவர்க்கும் தோன்றாத பொருளைத் திரு. மு. அருணாசலம், M. A. அவர்கள் எழுதியுள்ளார் எனவும், இப் பொருள் அப்பெரும்புலவர்க்

---

*பஞ்சகற்பம் - கடுக்காய்த் தோல், கத்தூரி மஞ்சள், நெல்லிப் பருப்பு, மிளகு, வேப்பம் வித்து என்பன.

†"வளர்இலைத் தருப்பை நுனியெனக் கூர்த்த
மதியினர் தொன்றுதொட் டுடைய
பளகறு கேள்விப் பயிற்சியர் மேற்கோள்
முதற்பகர் மூன்றினும் தெருட்டி
இளையருக் குணர்த்தும் இலக்கண நெறியோர்
ஈரிரு புலமையர் தம்முட்
களவிகல் இகந்து நிகழ்த்துறும் 'கலைநேர்
கருத்துப்போர்' இன்பமே பயக்கும்"

என்னும் கருத்துப் பற்றியே, இக்கட்டுரை ஈண்டு வெளியிடப் பெறுகின்றது. —முருகவேள்.

குத் தோன்றுதது ஏனே எனவும் நினைக்கலாம். அவ்வாறு ஒரு புகழ் எமக்கும் கிடைத்தல்வேண்டும் என யாம் விரும்புவது தவறன்று. அப்புகழைத் தலைமேற் சுமக்கப் போாவல் கொண்டே இதனை எழுதுகின்றேம்.

யாம் எழுதியவுரை திரு. ம. க. வேற்பிள்ளையும் ஸ்ரீமான் கி. வா. ஜகந்நாதையர், M.A. அவர்களும் எழுதிய உரைகளை ஒட்டியதாகும். அதற்குக் காரணம் பலஉள. யாமே ஆய்ந்து எழுதியிருப்பேம் ஆயின், அது சிறப்பும் அஃதின்மையும் உடைய பொருள் கொண்டதாயிருக்கலாம். அதனை அறிவார் ஆர் ? அந்தாதியின் முதற்பாடலில் 'திலகம்' என்பதற்கு 'மஞ்சாடி மலர்' என்றார் திரு. ம. க. வேற்பிள்ளை. 'நெற்றியில் அணியும் சிந்தூரத் திலகம்' என்றார். திரு. கி. வா. ஜ.

'திலகம்' என்றது ஆகுபெயராய் மலரையுணர்த்திற்று என்றது முன்னுரை. எம்முறையில் 'கதிரோனுச்சியிலிருக்கும் திலகம் எனலும் ஆம்' என்று எழுதியதன் கருத்து எல்லார்க்கும் விளங்குதல் அரிது. பண்டைத் தமிழ் நூற் பயிற்சியுடையார்க்கே எளிது. யாம் அப்பொருள் கூறியதற்கு அப்பாடலின் சொல்வகை (அந்நுவயம்) நின்றவாறே யாகும். திரு. ம. க. வே. உரை 'மலர்க்கமலை துதிக்கின்ற' என்னுந் தொடரை அபிராமி என்பதோடு இயைத்துளது. திரு. கி. வா. ஜ. உரை மின்கொடிக்கே அத் தொடரை அடையாக்கியுளது. இவ்வுரை இரண்டும் இத் திறத்தில் வேறுபடுதலை அறிக. இங்கே திரு. கி. வா. ஜ. உரையே பொருத்தம் உடையது. முன்னுரை 'தூராந்நுவயம்' உடையது. இதைக் குறிக்க விரும்பியும் சில காரணங்களால் இது குறித்து ஒன்றும் எம் உரையில் எழுதிலேம். அதுபற்றிய எம் கருத்தைக் 'கதிரோனுச்சியிலிருக்கும் திலகம்' என்றதால் ஒருவாறு குறித்தேம். அக் குறிப்பை இதில் வெளிப்படுத்துகின்றேம்.

'உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி என்றன் விழுத்துணையே'

1. அபிராமி உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலகம்; 'ஆதித் தன்...போற்றுவர் தையலையே' (அபிராமியந்தாதி-97)
2. அபிராமி உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்;
3. அபிராமி மாதுளம் போதும், மலர்க்கமலை துதிக்கின்ற மின் கொடியும், மென்கடிக் குங்கும தோயமும் என்ன விதிக்கின்ற மேனியினையுடையவள்;
4. அத்தகைய அபிராமி என் விழுத்துணை.

இப் பொருளில், அபிராமியின் திருமேனிக்கு ஒப்பாக மாதுளம் போதும் மின்கொடியும் குங்கும தோயமும் ஆகிய மூன்றே அமைவன. திலகமும் மாணிக்கமும் ஆக அபிராமி தேவியை உருவகித்தவாறும். முன்னுரைகளிலோ இவ்விரண்டும் மேனிக்கே உவமம் ஆயின. இனித் 'திலகம்' என்னும் சொல்லின் பொருளை ஆய்வாம்.

திலகம் என்பதற்கு ம. க. வே., கி. வா. ஜ. இருவரும் முறையே மஞ்சாடி மலர் என்றும், சிந்தூரத் திலகம் என்றும் பொருள் உரைத்தனர். அவை அவ்வாற்றானும் பொருத்தம் உடையனவே. மு. அ. 'உச்சிநேரத்தில் மலர்கின்ற பூவுடைய மஞ்சாடி மரத்தின் பிரகாசமான செந்நிறமான விதை' என்றுரைத்தல் சிறப்பு என்று எழுதினர். தங்கத்தை நிறுக்க உபயோகிக்கும் குன்றிமணியைக் குறித்தார் அவர். அதைப் பெரிய காட்டுமரங்களுள் ஒன்று என்றும், கெட்டியானது என்றும், மஞ்சாடி வைரத்தைக் கல்லில் உரைத்து நெற்றித் திலகம் இடுதல் மலையாளப் பிராமணர் வழக்கம் என்று கேள்வியுற்றிருக்கிறேன் என்றும் எழுதியுள்ளார். அவற்றின் பொருத்தம் அறிஞர் ஆராய்ச்சிக்குரியது. தங்கம் நிறுக்கப் பயன்படுத்தும் குன்றிமணியை மேனிக்குவமிப்பார் 'புறங் குன்றி கண்டனையரேனும் அகங்குன்றி மூக்கிற் கரியா ருடைத்து' என்ற திருவள்ளுவர்க்குத் துணையாக விரும்பினர் அது செய்வர். திலகமும் குன்றியும் வெவ்வேறு ஆதலைச் சிலப்பதிகாரத்து(அடியார்க்கு நல்லார் உரை + அரும்பத) உரையும், கல்லாடமும் பிறவும் குறிக்கின்றன. சிலம்பினது இது:

"1திலகம் 2உலோத்திரம் 3செம்பருத் திப்பூக்
4கவிரமலர் 5குன்றி 6முயலுதி ரம்மே
7சிந்தூரம் 8குக்கிற் கண்ணன எட்டும்
எண்ணிய குருவிந்த மன்னிய நிறமே."

திலகம் என்பது மஞ்சாடியையும் அஃது அதன் விதையையும் குறித்ததாகக் கொள்ளின், அது முதற் பாட்டில் அவ்வாறு பொருள் கொள்ளவைத்த அபிராமி பட்டர்க்கு ஒரு குறையேற்படுத்துவதாகும்.

'திலகம்' என்பது பல பொருள் உணர்த்துவது. 'திலக முக்குடை' 'திலகவெண்குடை' (183) 'திலக நீண்முடித் தேவர்' (246) 'திலகம்-மேலாதல்.' 'முடிகளுக்கு மேலாய முடி' (நச்சினார்க்கினியம்) 'திலகஞ் சேர்த்தித் திலகனைத் திருந்த வைத்தாள்' (305) 'திலகம் எனும் தகைத்து - மண்டபங்களுக்குத் திலகம் என்னும் தகைத்து.' (595) எனச் சிந்தாமணியும்; "மறந்தும் மழைமறா மகத நன்னாட்டுக்கு ஒரு பெருந்திலகம் என்றுரவோர் உரைக்குங் கரவரும் பெருமைக் கயிலையம்பதி" என மணிமேகலையும்; 'மகதம் உலகிற்கெல்லாம் திலகம் போன்றது' எனப் பெருங்கதையும் அச்சொல்லை ஆண்ட பொருளை ஈண்டறிக.

'பவள வாணுதல் திலகம் இழப்ப' என்றதற்கு அடியார்க்கு நல்லார் 'நுதல்தன்னை அணியும் சிறப்பைத் திலகம் பெறுமல் இழப்ப' என்றெழுதியிருப்பதும், ஈண்டு அறியத் தக்கது. இத்திலகம் நெற்றியில் அணிவது. நெற்றியிலோ உச்சியிலோ அணியும் திலகத்தை மேனிக்கு ஒப்பாக்குவது மரபன்று. பாவலர் பித்துற்ற காலத்தும் அதை ஒப்பாக்கிப்பாடார். அதனுல்தான் ம. க. வே. 'உச்சி' என்றதற்குத் தலையுச்சி என்று கொள்ளாது உயர்பு என்று கொண்டார். எம் உரையில், இரண்டாவது பொருளில், கதிரோன் உச்சியில் உள்ள திலகம் (ஓர் அணி) ஆகக் குறித்தோம். அதனை,

'அழல்கதிர் பரப்பி யழல்சேர் வட்டமொடு
நிழலவிர் கதிர்மதி நிரந்து நின்ருங்குத்
திலகத் திருமுகம் செவ்வன் திருத்தி'

என்றதில் அது தரும் பொருள் யாது!

'பைம்பொற் றிலகமொடு பட்டம் அணிந்த
ஒண்கதிர் மதிமுகம் ஒளியொடு சுடரச்
செம்பொன் ஓலை சேடுபடச் சுருக்கி'

என்றது மஞ்சாடி விதையையோ குறிக்கின்றது? மஞ்சாடிக் கொடிப்பூவைப் 'போங்கம்' என்றும், மஞ்சாடி மரத்தின் பூவைத் 'திலகம்' என்றும் குறிஞ்சிப்பாட்டு அறிந்துவைத் துளது. 'திலகப்பூ' என்று மலைபடுகடாத்திலும் உளது.

'காசறைத் திலகக் கருங்கறை கிடந்த மாசில் வாள் முகத்து வண்டொடு சுருண்ட குழலுங் கோதையும் கோல மும் காண்மார்' என்றது எப்பொருள் பயக்கும்? 'உயர் திலகக் கண்ணித் திவிட்டன்' என்றது தலையில் அணியும் கண்ணி எனப் பொருள் தருதல் காண்க. 'செஞ்சுடர்த் திலகக் கண்ணித் தேவர்' என்றும், 'விலக்கிய கதிரவாகி விடு சுடர் வயிரக்கோலத் திலகம் வீற்றிருந்த கண்ணித் திருமுடிச் செல்வ என்றான்' என்றும், 'செழுமலர்த் திலகக் கண்ணித் திங்கள்மா வண்ணன்' என்றும் சூளாமணியில் வருந் தொடர் களையும் நோக்கின், திலகம் திலதம் இரண்டும் ஒன்றே எனல் புலப்படும். உலக வழக்கிலும் 'திலகவதி' 'திலதவதி' இரண் டும் உண்டு. 'கதிரோனுச்சித் திலகம்' என்று யாம் எழுதிய பொருள் இதனாலும் உறுதிப்படும்.

'உச்சி நோக்கில் மலர்கின்ற மஞ்சாடிப்பூ' எனப் 'பரம் பரையாக அந்தாதி பயின்ற பக்தர் பலர்' கூறிய பொருளை உடன்பட்டுத் தம்முரையில் எழுதிய மு. அ. அம்மரத்தின் விதையே சிறப்புடைய பொருள் என்றெழுதுவது என்னே?

"திலக மென்பது நெற்றியிலணியும் ஓர் அணிகலமும் ஆம்; 'இதனை......முகத்தஞ்சேர்ந்த திலகம்....... அவிர்குழை ஆய்காது வாங்க' (கலி. 92 : 35-6) என்பதனாலும் உதயனன் வாசவதத்தையின் அணிகளைக் கண்டு புலம்புமிடத்து, "அந்தி யுள் முளைத்த வெண்பிறை போலச் செந்தீச் சிறுநுதல் மூழ்கத் தீந்து நிலமிசை மருங்கின் வீழ்ந்ததனையோ எனத் திலகம் நோக்கிப் பல பாராட்டியும்' என்று கூறுதலாலும் அறியலாகும். 'சிந்தூரத் திலக நுதற்சிந் தூரத்தின்' 'தாரா ரோடைத் திலக நுதற்சயிலம்' (பாரதம்) என்புழி யானை

நெற்றியிலும் திலகம் கூறப்படுகின்றது." (கலித்தொகை, அனந்த, பதிப்பு, பக். 595-6)என்றதும் ஈண்டறியற்பாலது.

குங்குமதோயம்:—'குங்கும வருணம்' - 'சிவந்த தொய யிற் குழம்பு'. (மணிமேகலை 19-87) 'குங்குமம் விரவிய தண்புனல்' (திருவானைக் காப் புராணம், 964) என்னுமிடத்துள்ளதே இவ்வந்தாதியின்கண் தோயம் என்றதாகும். 'குங்குமச் சாந்து வேய்ந்து' 'குங்குமக் கதிர்க் குழவியஞ் செல்வன்' - 'குங்குமம் போலுங் கதிரையுடைய இள ஞாயிறு.' 'கடியன கச்சினுற் கட்டப்பட்டன கொடியன குங்குமம் கொட்டப்பட்டன' என்பவற்றிலும் குங்கும தோயமே உணர்த்தப்பட்டது. 'குங்குமம் குளிர் சந்தனம் கோழகில் பிறவும் செங்கண் வெற்பர்கள் சிதைத்தெறி மடுத் திடப்படுவ' என்றதில் மரம் குறிக்கப்பட்டது.

இவ்வாறு குங்குமதோயம் திலகத்தின் வேறுதலை அறி யக் கிடத்தலின், ஒரே பாடலில் குங்குமத்தை இரண்டுமுறை உதாரணமாக ஆசிரியர் காட்டினுர் என்ன இடமில்லை. திலகம் வேறு; குங்குமதோயம் வேறு. 'உச்சி நேரத்தில் மலர்கின்ற மஞ்சாடிப்பூ' வும், 'மங்கல மகளிர் உச்சியி லணியும் குங்குமப் பொட்டு'ம் அபிராமியின் திருமேனிக்கு ஒப்பு எனல் பொருந்தாது. 'மஞ்சாடி மலர்' ஒப்பாதல் கருத்தாமிடத்து, அதன் மலர் விரியும் உச்சி நேரம் இங்கு இன்றியமையாத தன்று. 'அலர்ந்த செந்தாமரையினை வென்றது, அவ்வாசகம் உரைக்கக் கேட்ட அப்பொழுது இராமன் திருமுகச் செவ்வி' என்றுணரமாட்டாதார், அப்பொழுதலர்ந்த தாமரை என்று கொண்டுரைப்பார். அதுபோலும் இதுவும். மஞ்சாடி விதை எனலே போதும். ('உச்சி நேரத்தில் மலர்கின்ற பூவுடைய மஞ்சாடி' எனல் என்னையோ ?)

2

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை யைங்கணை பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண் ணியைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே

என்ற இந்நூலின் பயன்கூறும் பாட்டில், 'கரும்புமங்கை' என்றே எல்லாப் பதிப்பிலும் உளது. ஒருவரே 'கருப்பு

வில்லும்' எனப் பதிப்பித்தார். மு.அ.வும் 'கருப்பும் அங்கை' என்றே 'சித்தாந்தம்' இதழில் எழுதினர். இதனால், 'அங்கை' என்பதில் அவ்வொருவர்க்கன்றி ஏனையோர்க்குச் சங்கையே இல்லை. மூன்றாவது அடியில் இரண்டாவது சீரில் மட்டும் நேரில்லை.

ம. க. வே. உரையில் 'அங்குச பாசாங்குசம்' என்ற பாடத்தைக்கொண்டே தாமரையைக் கூறிற்று. 'அம்குசம்-அழகிய தாமரை; குசம் - தாமரை' என்பது அவர் உரையில் இன்றும் உளது. கி. வா. ஜ. உரை 'அங்குச பாசாங்குசம்' என்றதில் இருமுறை அங்குசம் பாய்தல் கொடிதென்று இரங்கி, ஒருமுறையைக் குறைக்க முயன்று, வரம்பு கெடாது காக்க, ஒரு காலை வெட்டிப் பாசாங்குசுமம் என்னும் இரண்டும் அம்பிகையின் திருக்கையில் விளங்கும் உண்மையைத் தம் புலமையின் திண்மையால் அறிவித்தார். தவற்றைத் திருத்தும்போதும் மரபு கெடாது காத்தல் அவரன்ன புலவரேற்றுக்குக் கடனாகும். அதன்பின் உரை யெழுதியவர் 'அங்குச' என்ற பாடத்தையும் நீக்கி 'அங்கையில்' என்ற பாடத்தை இடைப்படுத்தி, வில்லும் சொல்லும் (வில்லம்பு சொல்லம்பு) இணையாமாறு இணையாதொழிந்தும், 'தாமரை'யைத் திருக்கரத்தில் வைத்துக் கண்டு களிப்பதும் அன்றி, 'ஊகபாடங் கொண்டிடர்ப்படுவாரும் உண்டு' எனக் கூகபாடஞ் செய்தார். தாம் 'தாமரை' என்று பொருள் உரைத்ததற்கு மூலம் தம் பதிப்பில் ஓலம் இட்டு ஓடிப்போய் விட்டமை தமக்கே தெரியாது இடர்ப்பட்ட அநுபவம், இடர்ப்படுவாரைக்கண்டு இரங்குவித்தது போலும். ம. க. வே. உரையை உற்றுணராதும் தாம் கொண்ட பாடத்துக்குத் தாமரை வேண்டாமையை எண்ணாதும் எழுதியது அது. 'யான் ஒருவர் போன வழியுஞ் செல்லேன்' என்று அந்நூலிற்கற்று அநுபவத்திற் காட்டுவதே அறிவிற்கழகு. எம் உரையில் 'ஐங்கணை' என்று கொண்டதன் காரணத்தை மு. அ. கட்டுரையில் (பக்கம் 67-68) எழுதியிருக்கிறார்.

ம. க. வே. இருமுறை அங்குசம் பாய்ந்தாலும் முன்னோர் கருத்திற்கு முரண்படும் துணிவு தமக்கு ஆகாது

என்று அஞ்சி, உள்ளதற்குத் தம் புலமைக்குத் தகப் பொருளுரைத்தார். (அம்குசம்=அழகிய தாமரை). இளைஞர்க்கு அங்குஜம் என்றும் ஆயிடும்.

யாம் கொண்டதன் காரணத்தை இதைக் கற்பவர் கருத்தூன்றி நின்றுணரக்கடவர். 'ஐங்கணை' என்று யாம் புதிதாகப் படைத்தேம் அல்லேம். ஆதாரம் இன்றி எதையும் எப்பொழுதும் வெளியிடும் பழக்கம் எம்பால் (யாம் அறிய) இல்லை. முக்குண வசத்தால் நேர்ந்திருப்பின், அதைக் காட்டித் திருத்துவோர்க்குப் பெரிதும் நன்றி செலுத்துங் கடப்பாடுளேம்.

அபிராமியந்தாதியில் (பாடல், 2) 'பனிமலர்ப் பூங்கணையும் கருப்புச் சிலையும், மென்பாசாங்குசமும் கையில் அணையுந்திரிபுர சுந்தரி' 'கைக்கே அணிவது கன்னலும் பூவும்' (37) 'செங்கைக் கரும்பு மலரும்' (62) 'கருப்பு வில்லும்...வெரியம் பாணமும்' (100) என மலர்க்கணை ஆங்காங்கு இணைந்துள்ளமை புலனாகும். அம் மலர்க்கணை 'ஐங்கணை' ஆதலைப் 'பஞ்ச சாயகி' (50) 'படை பஞ்சபாணம் தனுக் கரும்பு' (73) 'பஞ்சபாண பயிரவியே' (76) 'பாசாங்குச பஞ்சபாணி' (43 ; 77) 'பார்க்குந்திசை தொறும் பாசாங்குசமும் பனிச்சிறை வண்டார்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்' (85) 'ஒற்றைநீள் சிலையும் அஞ்சம்பும் இக்கு அலர் ஆக நின்றாய்' (59) என்றவற்றால் இனிது அறியலாம். அறிவார்க்கு எம் உரையில் 'ஐங்கணை' என்ற பாடத்தின் முழுப்பொருத்தம் மழுப்பவேண்டாமலே நன்கு விளங்கும்.

இதுவரை எழுதியவற்றால் திரு. மு. அருணாசலம், M.A. எழுதியவற்றின் உண்மையைப் புலமையுடையோர் இனிதுணர்வர் என்று கருதுகின்றேம். 'பங்குச' என்றிருப்பது 'யம்புச' என்று கொள்வதற்கு எவ்வாற்றானும் இடந்தாராது. 'யைங்கணை' என்பதிலும் 'யங்குச' என்பதிலும் முதல் மூன்றெழுத்தும் ஒற்றுமையுற்றிருத்தலும், நூலாசிரியர் திருவாக்கில் பயிலகின்றதே யாம் கொண்ட பாடம் ஆதலும் தெளிவுறும்.

——

# திருப்பாலைவனம்

("சைவநெறிக் காவலர்" டாக்டர்-திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள், எம்.ஏ., எல்.டி., எம்.ஓ.எல்., பிஎச்.டி.)

(மலர் - 33; 96-ம் பக்கத் தொடர்ச்சி)

(4) திருப்பாலைவனம் சிவன் கோவிலில் திருக்கோட்டி மண்டபம் இருந்தது. ஆண்டார்கள் அதனை மேற்பார்க்கவும், திருமுறை ஓதவும் கடமைப்பட்டவரென்று கல்வெட்டுக் கூறுகிறது. சீர்காழி, திருக்காரூயில், திருவீழிமிழலை, திருவுசாத்தானம் முதலிய கோவில்களில் திருக்கைக் கோட்டி மண்டபங்கள் இருந்தன. அவற்றில் திருமுறைகள் பாதுகாக்கப்பட்டன. அவற்றைப் பாதுகாத்தவர் 'தமிழ்விரகர்' எனப்பட்டார் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.* இவற்றை நோக்க, திருப்பாலைவனத்தில் இருந்த திருக் கோட்டி மண்டபம் என்பது திருக்கைக்கோட்டி மண்டபமாக இருத்தல் கூடும் என்று கருதுதல் பொருத்தமாகும்.

## அக்கால மக்கள் பெயர்கள்

சூரியதேவர், நங்கமகா தேவியார் (நங்கைமகா தேவியார்), திருவேகம்பமுடையான், நாற்பத்தெண்ணாயிர† நம்பி,

---

*381 of 1918, 203, 414 of 454 of 1903.

†பழைய ஊர்கள்: கல் வெட்டுக்களில் கண்ட ஊர்களிற் சில, இன்றும் திருப்பாலைவனத்தைச் சுற்றிலும் இருந்து வருகின்றன. அவற்றின் பட்டியலைக் கீழே காண்க:

| | ஊரின் பெயர் | திருப்பாலைவனத்திற்கு | தொலைவு |
|---|---|---|---|
| (1) | மெதூர் | மேற்கு | $1\frac{1}{2}$ மைல் |
| (2) | பெரும்பேடு | தெற்கு | 4 மைல் |

இவ்வூரில் அக்காலத்தில் ஆட்சிமன்றம் இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (3) | பூவாமி | வடமேற்கு | 1 மைல் |

இவ்வூரில் அக்காலத்தில் ஆட்சிமன்றம் இருந்தது. இதன் பழைய பெயர் பூவரம்பி.

| | | | |
|---|---|---|---|
| (4) | கோளூர் | வடமேற்கு | $2\frac{1}{2}$ மைல் |

திருப்பாலைவனம் இவ்வூரைச் சேர்ந்ததாக இருந்தது.

சித்தமா தேவியார், கண்டகோபால மாணிக்கம், அம்மையப்பன், பார்ப்பதிபாகன், நாற்பத்தெண்ணாயிர* வேளான், திருவரங்கமுடையான், ஸ்ரீதரன், சோழமகிபாலன், தம்முசித்தி, நல்லசித்தி, எர்ரசித்தி, திருச்சிற்றம்பலமுடையான், பதுமன், மாரட்டன், அறமுடையான், அபயம்புக்கான், கங்கமாதேவி திலக வாள்நுதலி, பெரியான் திருச்சிற்றம்பலமுடையான், செழிய வேளான், பேரம்பலக் கூத்தன் வேட்டையழகியான், தியாக சமுத்திரப் பல்லவரையன், சுவேதவனப் பெருமாள், சாமிப் பிள்ளை, கோவப் பிள்ளை, பெரியாழ்வார் வானவன் விழுப்பரையன், திருஏகம்பமுடை

(5) தத்தமஞ்சி — தென்கிழக்கு — 3 மைல்
பழையகாலத்தில் ஆட்சிமன்றம் இருந்தது.

(6) பனப்பாக்கம் — வடமேற்கு — $3\frac{1}{2}$ மைல்
இது கல்வெட்டில் பனையம்பாக்கம் எனப்பட்டது. இவ்வூர் திருப்பாலைவனம் கோவிலுக்குச் சொந்தமானது.

(7) அயநல்லூர் — தென்மேற்கு — 5 மைல்
இதன் பழைய பெயர் அளிநல்லூர்.

(8) ஈஞ்சூர் — தென்மேற்கு — 10 மைல்

(9) பெருங்கரும்பூர் — வடமேற்கு — 4 மைல்
இதன் பழைய பெயர் பெருங்குறும்பூர்.

(10) நெற்குன்றம் — தென்மேற்கு — 15 மைல்
இதன் பழைய பெயர் மேய்க்குன்றம்; "மெய்க்குன்ற வளநாட்டுப்பையூர்க் கோட்டம்" என்பது கல்வெட்டு.

(11) சிறுவாக்கம் — தெற்கு — 7 மைல்
இதுபண்டு 'சிறுவனம்' எனப்பட்டது.

(12) பேரூர், ஆலூர், ஆமூர், எயினூர், புதுவாயில் என்பவை பையூர்க் கோட்டத்தைச் சேர்ந்தவை.

*"மதுரையில் நாற்பத்தெண்ணாயிரம் சிவனடியார் இருந்து சிவத்தொண்டு செய்து வந்தனர்" என்று நம்பி திருவிளையாடல் கூறி அப்பெருமக்கட்கு வணக்கம் செலுத்துகிறது. 'நாற்பத்தெண்ணாயிரம்' என்பது தில்லை மூவாயிரம், திருப்பெருந்துறை—முந்நூறு, திருவாக்கூர்—ஆயிரம், திருவீழிமிழலை—ஐந்நூறு என்றாற்போல ஒரு கூட்டத்தின் பெயராகும். இக்கூட்டத்தினர் சிதம்பரம், திருவானைக்கா, திருப்பூவணம் போன்ற இடங்களில் இருந்து சிவத்தொண்டு செய்தனர் என்று தக்கயாகப்பரணி (கண்ணி 219,

யான் செங்கதிர்ச் செல்வன், நாராயணன்,* வேங்கடராசு, உதயகிரி அமைச்சன் திம்மனு, ஓபல ராஜய்யா, அன்னப் பிள்ளை நாயக்கர், தேவர்கள் தேவன்.

## இன்றைய திருப்பாலைவனம்—கோவில்

இவ்வூர்ச் சிவன் கோவில் கிழக்கு நோக்கியுள்ளது; ஐந்து நிலைகள் உள்ள கோபுரத்தை உடையது. கோவிலின் முன் பதினாறுகால் மண்டபம் கோவிலின் வாயிலை அழகு செய்கிறது. கோவிலின் எதிரில் ஒரு திருக்குளம் இருக்கிறது. அதன் பெயர் அமிர்தபுஷ்கரணி என்பது. அக்குளத்தில் செந்தாமரை பூத்து அழகு செய்கிறது. அதற்குக் கிழக்கே திரு நந்தவனம் இருக்கிறது.

கோவில் நீள் சதுரப் பரப்பையுடையது. கோவில் மதில் கிழக்கு மேற்கில் 506 அடி நீளமுடையது; தெற்கு வடக்கில் 550 அடி நீளமுடையது. கோவிலுள் சுவாமிக்கும் அம்மைக்கும் தனித்தனிக் கோவில்கள் உள்ளன; தனித் தனித் திருச் சுற்றுக்களும் உள்ளன. இவ்விரண்டு கோவில்களையும் உள்ளடக்கிய வெளித் திருச்சுற்று ஒன்றும் இருக்கிறது. சுவாமியின் பெயர் பாலீசர் அல்லது அமிர்தேசுவரர் என்பது; அம்மன் பெயர் லோகாம்பிகை என்பது.

கோவிலின் கருவறை யானையின் பின்பக்கத்தை ஒத்திருக்கிறது. சுவாமி கோவிலைச் சுற்றியிருக்கும் உள் திருச்சுற்றில் ஆஞ்சநேயர், நவக்கிரகம், சண்டேசுவரர் முதலிய மூர்த்தங்கள் ஸ்தாபிக்கப்பட்டுப் பூசையில் இருந்து வருகின்

---

உரை) கூறுகின்றது. ஒரு நடன மகள் 'நாற்பத்தெண்ணாயிர மாணிக்கம்' என்ற பெயருடன் இருந்தாள் என்று கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. (202, 214 of 1929-30). இந்த நாற்பத்தெண்ணாயிரம் தொண்டரிடம் அவளோ அவள் பெற்றோரோ கொண்டிருந்த மதிப்பு இதனால் தெரிகிறதன்றோ? இவ்வாறே இக்கோவில் கல்வெட்டில் காணப்படும் நம்பி என்பவனோ அவன் பெற்றோரோ நாற்பத்தெண்ணாயிரவரிடம் கொண்டிருந்த மதிப்பு இப்பெயரால் நன்கு தெரிகிறது.

*இதுமுதல் 3 பெயர்கள் 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

றன. சுவாமி கோவிலில் மகா மண்டபம் இருக்கிறது. கோவிலுள் தென்மேற்கு மூலையில் இத்தல மரமாகிய பாலை மரம் தழைத்து ஓங்கியுள்ளது.

இங்குள்ள லிங்கம் சுயம்பு. வெண்மை நிறம் உடையது. இதன் மேற்புறம் மரப்பட்டையால் மூடப்பட்டதுபோல் காணப்படுகிறது. இதன் உச்சியில் பிளவு காணப்படுகிறது. "இது ஒரு காலத்தில் மரத்தால் மூடப்பட்டிருந்தது. சோழ அரசன் யானை அம்மரத்தில் கட்டப்பட்டது. அந்த யானை திடீரென்று இறந்தது. அரசன் சினந்து அம்மரத்தைக் கோடரிகொண்டு வெட்டுவித்தான். அப்போது மரத்தின் அடிப்பகுதியிலிருந்து குருதி வெளிப்பட்டது. சோழன் உடனே சோதித்தான்; லிங்கத்தை மரம் மூடியிருந்ததை அறிந்தான்; லிங்கத்தின் உச்சியில் கோடரியால் பிளவு ஏற்பட்டிருந்ததைக் கண்டான்; அவ்விடத்தில் ஒரு கோவில் கட்டினான்" என்பது தலவரலாறு.

"பாற்கடலில் கிடைத்த அமிர்தத்தைத் தேவர்கள் இவ்விடத்தில் பங்கிட்டுக் கொண்டனர்—அமிர்தத்தின் ஒரு பகுதி கொண்டு லிங்கத்தை அமைத்துப் பூசித்தனர். அதனால் சுவாமி அமிர்தேசுவரர் எனப்பட்டார்" என்பது தலவரலாறு. லிங்கத்தின்மீது சாத்தப்படும் சந்தனம் கரைகிறது, ஆதலால் வெள்ளியால் செய்யப்பட்ட திருநீற்றுப் பட்டத்தின் மீதுதான் சந்தனம் சாத்தப்படுகிறது. லிங்கத்திற்குப் பால், பனிநீர், இளநீர், தண்ணீர் முழுக்கு மட்டும் நடைபெறுகிறது.

இக்கோவிலுக்குப் பலஊர்களில் நிலங்கள் இருக்கின்றன. பையூர்க் கோட்டத்து வேளாளர் என்ற முதலிமார்கள் இக்கோவில் நடைமுறையைக் கவனித்து வருகின்றனர். விழாக்களும் மூன்று கால பூசையும் நடைபெற்று வருகின்றன. அச்சிடப் பெறாத தலபுராணம் (15 சருக்கங்களை உடையது) உரை நடையில் உள்ளது. இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் ஆணையின் படி 1950-இல் தலவரலாறு ஒன்று சிறிய அளவில் (16 பக்கம்) அச்சிடப்பட்டுள்ளது.

——

# நல்ல யாத்திரை

[கா. இராமநாதன், பி.ஏ. பி.எல்., மலேயா.]

மலாயாவிலிருந்து சிலரைக் கூட்டிக்கொண்டு இந்தியா யாத்திரை செல்லவேண்டுமென்ற எண்ணம் பலநாளாக எனக்கு இருந்துவந்தது. யாத்திரையால் பெறும்பலன் பல. பக்தி வளரும்; சற்குருவாய்க்கும்; இறையருள் கிட்டும்.

யாத்திரைக்குச் சிலர் சேர்ந்துபோவதால் அன்பு பெருகும், பொறுமையும் கட்டுப்பாடும் கைகூடும். வயதுமுதிர முதிரக் கோஷ்டி யாத்திரையில் எனது ஆர்வம் குறையத் தொடங்கியது.

நான் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தில் ஒரு சாதாரண உறுப்பினன். அச்சங்கத்தின் உறுப்பினரில் சிலர் ரிஷிகேசம் சென்று சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களைக் கண்டு வணங்கி வந்திருக்கிறார்கள். அவரவர்கள் திரும்பியபோது சங்கத்தில் சிலர் தங்கள் அனுபவத்தைச் சொல்வது வழக்கம் அதனால் பலருக்கு ரிஷிகேசம் போகவேண்டுமென்ற ஆசை. சிவானந்த சுவாமிகளின் முக்கிய சிஷ்யர்களில் ஒருவரான டாக்டர் சுசிலா நாயர் கோலாலம்பூருக்கு வந்தபோது ரிஷிகேச யாத்திரையின் ஆசையை அவர்கள் வளர்த்தார்கள். இந் நிலையில் திரு. க. நல்லய்யா தனக்கும் சிலருக்கும் ரிஷிகேசம் போகவேண்டுமென்ற எண்ணம் இருப்பதாகவும் நான் கூட்டிக்கொண்டு போக முடியுமா என்றும் கேட்டார். ஒன்றும் யோசிக்காமல் பத்துபேர் சேர்ந்தால் போகலாம் என்றேன்.

ஏழெட்டு நண்பர்கள் சேர்ந்தார்கள். அதற்குமேல் சேராதென்று நினைத்தேன். பேப்பரில் அறிவிக்க நான் ஒத்துக்கொள்ளவில்லை. யாத்திரை விஷயம் வெளியில் பரவியதும் பலர் சேரவிரும்பினர். சிபார்சுகள் வந்தன. தக்க குணமும் ஒத்த நோக்குமுடையவர்களைப் பொறுக்கினோம்.

யாத்திரை போவதால் பொது அறிவும் பக்தியும் வளருகிறது. படிப்புக்கு உறுதி தர யாத்திரை அவசியம். ஒரு குழுவாய்ச் செல்வதால், கட்டுப்பாடும், சகிப்புத் தன்மையும்,

சேவை மனப்பான்மையும், பிறரைப் பார்த்து ஆர்வ உணர்ச்சியும் உண்டாகிறது.

டிக்கட் : இனி கப்பல் டிக்கட் வாங்கவேண்டும். இது பெரிய பிரச்னை. கோலாலம்பூரில் எந்தக்கப்பலுக்கும் இரண்டு மூன்று டிக்கட் சிபார்சின்பேரில் கிடைக்குமென்றார்கள். என் பேர் சொன்னாலே டிக்கட் கிடைக்காதென்று சிலர் சொன்னார்கள். பிரமப்பிரயத்தனம் செய்யப்பெற்றது. இந்த விதமான கஷ்டத்தைத் தீர்க்க எத்தனையோ பேர் இந்தியாவிலிருந்து வந்தார்கள். விருந்துபசாரம் ஏற்றார்கள். விசாரித்தார்கள். அறிக்கையும் எழுதியிருப்பார்கள். முன் இருந்தநிலை மாறவில்லை. நாங்கள் பின்னர்ச் சிங்கப்பூருக்கு எழுதினோம். பினாங்கிற்கு எழுதினோம். பன்னிரண்டு டிக்கட் ஏற்பாடு செய்துகொண்டனர். குடும்ப அசௌகரியத்தால் எங்கள் குழுவோடு வர முடியவில்லையே என்று சிலர் மிக வருந்தினர். சிலர் டிக்கட் கிடைக்கவில்லையே என்று துக்கப்பட்டனர்.

கடைசியாகப் பயணம் தொடங்கும்போது நாங்கள் 16 பேர். இருவர் கோலாக்கிள்ளானில் சென்னை ராஜ்யக் கப்பலில் ஏறினர். இதர 14 பேர் பினாங்கில் ஏற ஏற்பாடு.

குழுவினர் : திருவாளர்கள் : கா. இராமநாதன், பள்ளத்தூர், தலைவர். பே. கிருஷ்ணர், சுளிபுரம், உபதலைவர். உத்தியோக ஓய்வு பெற்றவர். சு. நேசமணி, ஊரேழு. க. நல்லையா, புன்னலைக் கட்டுவன் வடக்கு, உத்தியோகம். ந. கனகாம்பிகை, ஷியார் மனைவி. செ. நாகம்மா, நல்லூர். இ. செல்லாச்சி, காரதீவு, வீ. சுந்தரம், கரம்பொன், சு. அன்னலெட்சுமி, ஷியார் மனைவி, தி. விஜயலெட்சுமி வட்டுகோட்டை மேற்கு, நா. வேலாயுதம் செல்ல சன்னிதி, உத்தியோகம். ஆ. நாகம்மா, வட்டுக்கோட்டை மேற்கு, வ. வயித்தியலிங்கம். புன்னலைக்கட்டுவன் வடக்கு. உத்தியோக ஓய்வு பெற்றவர். வ. சிவகங்கை, ஷியார் மனைவி, சு. விக்னேஸ்வரி, கரம்பொன் ஆசிரியை திரு. சுந்தரம், அன்னலெட்சுமி மகள், மு. இரத்தினம்மாள், கொண்டிவில். ராமகல்பகம், பி. ஏ. தலைவர் மகள், வி. நாகலிங்கம், தொப்புரம் உத்தியோகம். சங்கீத பூஷணம், நா. யோகேஸ்வரி, ஷியார் மனைவி. உருத்திராணி

மேனன், பினங்கு. விசாலாட்சி, ஓய்வு பெற்றவர், பார்வதி, ஆசிரியை. முதல் 17 பேரும் எல்லாப் பகுதிக்கும் வந்தனர். மற்றவர் பெரும்பாலும் வந்தவர்கள். இடையிடையே சேர்ந்து கொண்டவர் பலர்.

விருந்து : யாத்திரைக் குழுவினருக்கு விருந்துகள் நடந்தன. முதல் விருந்து கிரியா பாபா சங்கத்தாரால். திரு. க. வீ. அழ. மு. இராமநாதன் செட்டியார் தலைமை வகித்தார். தன் அனுபவங்களை ஒட்டிப் பல உதவியான விஷயங்கள் சொன்னார். எங்களுக்குச் சௌகரியம் செய்து கொடுக்கச் சொல்லி இந்தியாவிற்குப் பல ஊர்களுக்கு எழுதினார். மகா மாரியம்மன் கோவிலில் அர்ச்சனை நடந்தது. இலங்கைச் சங்கத் தலைவர் திரு. செவ்வந்திநாதன் ஒரு பிரார்த்தனைக் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார். சுமார் 200 பேர் வந்திருந்தனர். அன்பு மொழி பல கூறினர், தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தில் நடந்த கூட்டத்தில் இந்தியாவிலிருந்து வந்திருக்கும் முத்தமிழ்ப் பெருஞ்சொற்கொண்டல் புரிசை முருகேச முதலியார் அவர்களும் பேசினர். வேஷ்டி, துண்டு கொஞ்சமேகொண்டு போகவேண்டுமென்றும், சில கெட்ட குணங்களை விட்டுவிட வேண்டுமென்றும் கூறினர். இன்னும் பல யோசனைகள் கூறப்பெற்றன. ரிஷிகேசத்திலிருந்து சுவாமிகள் எழுதிய கடிதத்தில் எல்லோருக்கும் நல்வரவு கூறி எல்லா வசதியும் செய்து தருவதாகவும், தனி சத் சங்கக்கூட்டம் எங்களுக்கு ஏற்பாடு செய்வதாகவும் எழுதியிருந்தார்.

நான் மலாயாவில் இல்லாதபோது என் வேலைகள் நடைபெறப் பல ஏற்பாடுகள் செய்யவேண்டியதிருந்தது. அது புறப்படும் நாள் வரை சரியாக இருந்தது. அதோடு கொண்டு போக வேண்டிய சாமான்களை ஒவ்வொன்றாக மறந்துவிடாமல் எடுத்துவைக்கவேண்டும். போகும் இடங்களுக்கு எழுதுதல், பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், இந்தியாவில் ரயில் டிக்கட்டு, பணம் அனுப்புதல் என்பன போன்ற பல விஷயங்களைக் கவனிக்கவேண்டியதிருந்தன. இந்த யாத்திரைக்கு இவ்வளவு தயார் செய்யவேண்டியதிருந்தது ; ஆனால் இந்த உலகைவிட்டு யாத்திரை செய்வதற்கு

ஒருவிதத் தயாரிப்பும் செய்யத் தோன்றவில்லையே ! இது ஏனோ ? ஒரு யாத்திரை போவது நமக்குத் தெரிகிறது, மற்ற யாத்திரை போவோம் என்பதை அறவே மறந்துவிடுகிறோம். நான் யாத்திரை புறப்பட எண்ணியபோது கைகூடவில்லை. அப்பொழுது முயற்சி செய்திருந்தாலும் என்னை நம்பி ஒருவரும் சேர்ந்திருக்கமாட்டார்கள். நான் அவ்வெண்ணத்தைக் கைவிட்டபோது அது கைகூடுகிறது. அடியேன் காற்றடித்தால் பறக்கும் துரும்பு. இல்லையானால் அசையாது கீழே கிடக்கும். திருவருள் உந்தும்போது யாரே தடுக்க வல்லார் ?

நாய்க்கடி : பொய்விட்டு உடையான் கழலைக்காணப் பயணமாகும் நாள் வந்தது. 1959 பிப்ரவரி 25௳ அன்று காலை செந்தூல் தண்டபாணி கோயிலில் விபூதிக் காப்பிட்டு ஆயிரநாம அர்ச்சனை செய்து வணங்கினோம். ஐக்கிய வணக்கம் செலுத்தினோம். உடல் பலவாயினும் உள்ளம் ஒன்றாக, உணர்ச்சி ஒத்ததாக இருக்க வேண்டினோம். மாலை ஆறு மணிக்கு முன்னர், சர்ச் தெரு, 5-ம் நெம்பருக்குப் பெட்டிகளை அனுப்பிவிட வேண்டும் என்றும், எட்டு மணிக்கு அங்கு வந்து சேரவேண்டு மென்றும், எட்டேகால் மணிக்கு மகாமாரியம்மன் கோயிலில் தரிசனம் செய்து கொண்டு 9 மணி ரயிலுக்குப்பயண மாவதென்றும் ஏற்பாடு. அவ்வாறே எல்லாரும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் வந்து விட்டனர். விநாயகர் நாமம் சொல்லி, கோளறு பதிகம் சொல்லிப் போற்றிச் செல்வதென முடிவு செய்தோம். அச்சமயம் திரு. நேச மணியை, வீட்டில் கட்டி போட்டிருந்த நாய் ஒன்று கடித்து விட்டது, பல் அழுத்தமாகப்பதிய, இரத்தம் கசிந்தோடியது. அழுதாள், உடனே கட்டுப் போட்டு டாக்டரிடம் ஊசி போட அனுப்பிவிட்டுப் பயணப் பிரார்த்தனை நடந்தது. அவள் ரயில் நிலையத்திற்கு நேரே வந்தாள். நல்ல காரியத்தில் பல சோதனை ஏற்படுவது இயல் பென்று சமாதானம் செய்து கொண்டோம். எங்கள் குழுவினரில் சிலருக்குப் பயணத்திற்கு முன்னர் சுகவீனம். ஒருவர்

இருவர் பின் தங்க நேரிடுமோ வென்ற ஐயம் இருந்தது. ஆண்டவன் அருளினல் அவ்வாறு ஒன்றும் ஏற்படவில்லை.

கோலாலம்பூர் புகை நிலையத்திற்கு ஏராளமான பேர் வந்திருந்தனர். சுமார் நூற்றைம்பது பேருக்கு மேல் இருக்கும். பலர் மாலை அணிவித்தனர். பிரயாண அன்பளிப்பாகச் சிலர் பொருள் தந்தனர். யாவரும் வாழ்த்துரை பகர்ந்தனர். மணி ஒன்பது, ரயில் நகர்ந்தது. தென்னுடைய சிவனே என்ற ஒலி ரயிலிலிருந்து கிளம்பியது. கீழ் நின்ற கூட்டத்திலிருந்து, எதிரொலி வந்தது. தென்னுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

---

# கடவுளால் முடியாத காரியங்கள்

(முரு. பழ. இரத்தினம் செட்டியார்)

கடவுளால் முடியாத காரியங்களும் உண்டா? தலைப்பே வியப்பினை அளித்தல் கூடும். ஒரு நாள் திரு. புரிசை முருகேச முதலியாரவர்களுடன் பேசிக்கொண்டிருந்த பொழுது, இறைவனால் செய்ய முடியாத ஒரு காரியத்தை நகைச் சுவை ததும்ப எடுத்துச் சொன்னார்கள் :—

"ஓர் அரசன் தன் ஆட்சியின் கீழ் அடங்கி நடக்காத எந்த ஒரு குடிமகனையும் உடனே தன் எல்லையை விட்டு வெளிக் கடத்திவிட முடியும். இன்றும் அரசாங்கங்கள் நாடு கடத்தல் உத்தரவுகள் பிறப்பிப்பதைப் பார்க்கிறோம். ஆனல் இறைவன் தன்கீழ் அடங்கி நடக்காத எந்த உயிரையும் தன் எல்லையை விட்டு வெளிக் கடத்த முடியாது. எல்லாம் அவன் எல்லையே; அவன் இல்லாத இடம் இல்லை. எங்கே போகச் சொல்வது; எங்கும் இருக்கின்ற வியாபகத் தன்மையால் பாவம் அவனுக்கு இம் முடியாமை ஏற்படுகிறது!"

முதலியாரவர்கள் கூறிய இம் 'முடியாமை' இறைவனின் பெருமையை இன்னும் அதிகமாக நாம் உணரும்படி செய்

கின்றதே அன்றி ஒரு சிறிதும் குறைக்கவில்லை என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? எனவே நாமும் இக்கட்டுரையில் இறைவனின் பெருமைக்கு எடுத்துக் காட்டாகச் சைவசித்தாந்தத்தில் கூறப்படும் நுட்பங்களை விளக்கும் வகையில் அவனால் செய்ய முடியாத காரியங்களை இரண்டாகக் குறிப்பிட விரும்புகிறோம்:—

(அ) எல்லா ஆன்மாக்களுக்கும் உடனடியாக இறைவன் முத்தி அளிக்க முடியாது.

(ஆ) உலகில் தீய செயல்களே நடைபெறாமல் அறவே ஒழித்து, நல்ல செயல்கள் மட்டும் நடைபெறும் படி இறைவனால் செய்ய முடியாது.

இனி இம் 'முடியாமைகள்' இறைவனுக்கு ஏன் ஏற்படுகின்றன என்பதை விவரிப்போம். சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைளையே அலசிப் பார்த்து இம் 'முடியாமை'களை நிறுவ வேண்டியதிருப்பதால் கட்டுரை சிறிது நீள்வதோடு, அறிஞர்களிடையே கருத்து வேற்றுமைகளையும் எழுப்பக்கூடும். எனினும் தகுந்த சாத்திர ஆதாரங்களை மனத்திற்கொண்டு இயன்றவரை யாவர்க்கும் புரியும் வகையில் விளக்க முயல்கின்றோம்.

உலகில் இன்று மக்களால் பின்பற்றப் பட்டுவரும் ஆத்திக மதங்களில் பல இறைவனே எல்லாவற்றையும் உண்டாக்கினான் என்னும் கொள்கையை உடையனவாய் இருக்கின்றன. "அனைத்தும் ஆண்டவன் படைப்பு" எனச் சொல்வதுதான் அவனுக்குப் பெருமையாக இருக்கும் என்றும் அவை கருதுகின்றன. சைவசித்தாந்தம் உலகை இறைவன் படைத்தான் எனக் கொண்டாலும் அவன் அதனை "மாயை" என்னும் பொருளிலிருந்தே உண்டாக்கினான் என்றும், ஆனால் அந்த 'மாயையை' அவன் உண்டாக்கவில்லை என்றும், அஃது இறைவனைப் போல யாராலும் உண்டாக்கப்படாத அநாதி நித்தியப் பொருள் என்றும் கூறுகிறது. அதுபோலவே உயிர்களையும் இறைவன் உண்டாக்கவில்லை என்றும், அவைகளும் அவனைப்போல யாராலும் உண்டாக்கப்படாத அநாதி நித்தியப் பொருள் என்றும்

கொள்கிறது. "இல்லது தோன்றாது" என்னும் சற்காரிய வாத அடிப்படையில், உயிர்களும் உலக மூல காரணப் பொருளாகிய மாயையும் என்றும் உள்ள பொருட்களே எனச் சைவசித்தாந்தம் கூறுவதை ஏனைய ஆத்திக சமயத்தினர் அனைவரும் ஒப்புக்கொள்ளுவார்களென எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் சற்காரிய வாதம் அவர்கள் எல்லார்க்கும் உடன்பாடான ஒரு கொள்கை அன்று. எனினும் கடவுள் உண்டென்று கொள்கின்ற அவர்கள் அனைவரும் ஏற்குமாறு இறைவன் எந்த மூல காரணப் பொருளையும் உண்டாக்கவில்லை என்னும் கருத்தை நிறுவ வழி இருக்கிறது.

"இறைவன் ஒரு தேவையும் அற்றவன்; எந்தக் குறையும் இல்லாதவன்; எல்லையில் கருணை உடையவன்; பூரண அறிவும் இன்பமும் நிறைந்தவன்," என்று ஆத்திகர்கள் அனைவரும் கூறுகின்றனர். அப்படியானால் அவன் இவ்வுலகையும், உயிர்களையும் படைக்கவேண்டிய அவசியம் என்ன? இவைகளால் அவனுக்கு ஆகப்போவது ஒன்றுமில்லை. தன்னை வழிபடுவதற்காக உயிர்களையும் அவை வாழ்வதற்காக உலகையும் படைத்தான் என்றால், அவனுக்குப் புகழ்ச்சியிலும் ஆட்சியிலும் விருப்பம் இருக்கிறதெனக் கொள்ளவேண்டியது வரும். இவ் விருப்பத்தால் அவனுக்கு உயிர்களும் உலகமும் தேவைப்படுகின்றன என்றாகிவிடும். சும்மா ஒரு நோக்கமும் இன்றி இவைகளைப் படைத்தான் என்றால், நோக்கம் இன்றிப் படைத்த படைப்பில் உயிர்களுக்குத் துன்பவுணர்வு தோன்றும்படி படைக்கலாமா? அங்ஙனமானால் அவன் கொடியவனா? எனவும் கேட்கவேண்டியது வரும். "உலகைப் படைத்தது அவன் விருப்பம் (His will). அதனைக் கேட்க நமக்கு உரிமை இல்லை," என்று சிலர் சொல்வதுண்டு. அவன் விருப்பம் என்றால் கல்லையும் மண்ணையும் படைத்து விட்டுச் சும்மா இருந்திருக்கலாம். அறிவுணர்ச்சி உள்ள உயிர்களைப் படைத்து அவைகளுக்கு மரணம், நோய், துன்பம் முதலியவைகளை உண்டாக்குவது கொடுமையாகாதா? தனக்கு ஆற்றல் இருக்கிறதென்பதற்காக

இப்படி எல்லாம் படைத்துக் கொடுமைப் படுத்தலாமா? உயிர்களுக்குத் துன்ப அநுபவம் ஏற்படாவிட்டால் அவன் எப்படியாவது போகிறுன் என்றிருக்கலாம். அங்ஙனம் இன்றிப் பல்வகையான துன்பங்களை நாம் அநுபவிப்பதால், அவன் ஏன் நம்மை உண்டாக்கவேண்டும்? எனக் கேட்க உரிமை இருக்கிறது. "அவன் விதித்தபடி நடந்தால் நமக்கு இன்பத்தை வழங்குவான்; மாறுக நடந்தால்தான் துன்பத்தை உண்டாக்குவான்; நம்மைப் படைத்து நமக்குச் சுயமாகச் சிந்திக்கும் அறிவையும் தந்திருக்கிறுன்; எனவே அவனைக் குறைசொல்லக் கூடாது," என்று சிலர் கூறுவதுண்டு. ஆடு, மாடு, கோழி முதலிய சிற்றுயிர்களுக்குச் சுயமாய்ச் சிந்தித்து, நன்மை தீமைகளைப் பகுத்தறியும் அறிவு வன்மையோ, இறைவன் என்ன விதித்தான் என்பதைத் தெரிந்துகொள்ளும் சாதனமோ இல்லை. அவைகளுக்கும் துன்பம், நோய், மரணம் ஆகியவை ஏற்படக் காரணம் என்ன? "அவை ஆன்மாக்கள் அல்ல" எனச் சிலர் கருதினுலும், துன்பத்தை அவை அநுபவிக்கின்றன என்பதையும், துன்பத்தை உணரும் அறிவுணர்ச்சி அவைகளுக்கு இருக்கிறதென்பதையும் யாரும் மறுக்க முடியாது. எனவே அந்த "அப்பாவி" உயிர்களுக்குத் துன்ப உணர்ச்சியைக்கொடுப்பது எல்லையில் கருணை உடைய இறைவனுக்கு ஏற்ற செயலாகுமா? "இவ்வுலகில் நாம் எவ்வளவுக் கெவ்வளவு துன்பத்தை அநுபவிக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு இன்பத்தைப் பரலோகத்தில் அவன் நமக்கு வழங்குவான்" எனக் கிறிஸ்துவமத சகோதரர்கள் கூறுவதுண்டு. கருணை நிறைந்த இறைவன் எல்லா உலகங்களிலும் இன்பத்தை வழங்கக் கூடாதா? பரலோகத்தில் மட்டும்தானு வழங்கவேண்டும்? பரலோகத்தில் இன்பத்தை வழங்குவதற்காக இவ்வுலகில் நம்மைத் துன்பமுறச் செய்வது நியாயமாகுமா? துன்ப அநுபவம் இருந்தால்தான் இன்பத்தை உணரமுடியும் என்றால், துன்ப அநுபவம் இல்லாமலே இன்பத்தை உணரும்வகையில் நம்மைப் படைக்கும் ஆற்றல் அவனுக்கு இல்லை என்ருகிறதே? அவன் எங்ஙனம் துன்ப

அநுபவம் இல்லாமலே இன்பப் பொருளாக என்றும் இருக்கிருனே, அதுபோல நம்மை அவன் படைக்கக் கூடாதா? மேலும் இங்ஙனம் எல்லாம் படைத்து ஆட்சிபுரிய வேண்டுமென்கிற தேவை அவனுக்கு என்னவந்தது? சிலர், "அவன் உலகையும் உயிர்களேயும் ஏன் படைத்தான் என்பதைச் சொல்ல முடியாது. அது நம் அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயம்," எனச் சொல்லித் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பதுண்டு. படைத்ததற்குரிய காரணம் நம் அறிவுக்கு அப்பாற்பட்டது என்ருல் உலகையும் உயிர்களேயும் அவன் படைத்தான் என்பதுமட்டும் நமக்கு எப்படித் தெரிந்தது? அவனே படைத்தான் எனச் சொல்பவர்கள், ஏன் படைத்தான் என்பதற்கும் காரணம் சொல்லித்தானே தீரவேண்டும்? வேறு காரணம் ஒன்றும் சொல்லமுடியாமலிருப்பதை உணர்ந்த சிலர்; "இறைவன் லீலா விநோதமாக, அஃதாவது திருவிளேயாட்டாக உலகையும் உயிர்களேயும் படைத்தான்" என அலங்காரமாகக் கூறுவதுண்டு. அவனுக்கு ஏன் விளேயாட்டு? மகிழ்ச்சியைப் பெருக்கிக்கொள்ள அது தேவைப்படுகிறதா? எனவே இங்ஙனம் கூறுவன எல்லாம், "இறைவன் ஒரு தேவையும் அற்றவன்; எல்லேயில் கருணை உடையவன்; எந்தக் குறையும் இல்லாதவன்" எனக் கூறப்படும் இலக்கணங்களுக்கு மாருக முடிவதைக் காணலாம். தன்னிலே ஒரு குறையும் இல்லாத பூரண நிறைவுப் பொருளாகிய இறைவனுக்கு எந்தப் பொருளேயும் புதிதாக உண்டாக்கவேண்டிய அவசியம் எதுவும் இருக்க முடியாது. ஆகவே உயிர்களேயும், உலக மூல காரணப் பொருளாகிய மாயையையும் அவன் உண்டாக்கவில்லே என்றும், அவைகளும் அவனேப்போல யாராலும் உண்டாக்கப்படாமல் அநாதி நித்தியமாகவே இருக்கின்றன என்றும் கொள்வதே, கடவுள் உண்டென்று அவனுக்குப் பெருமையும் ஏற்றமும் கூறுகின்ற ஆத்திக சமயத்தினர்க்குப் பொருந்துவதாகும். அப்படியானல் மாயையிலிருந்து உலகை உண்டாக்கவேண்டிய அவசியமும், உயிர்களுக்கு அம்மாயையிலிருந்து உடல்களேப் படைத்தளிக்க வேண்டிய அவசியமும் இறைவனுக்கு

ஏற்பட்ட காரணம் என்ன ? என்னும் கேள்வி இயல்பாக எழும். இக்கேள்வியைப் பின்னே ஆராய்வோம்.

"திருவிளையாட்டு" எனச் சொல்வது பொருந்தாது என்றால் மணிவாசகப் பெருமான் திருவெம்பாவையில், "நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்" என அருளிச் செய்திருப்பது பொருந்துமா ? எனக் கேட்கலாம். "இவ்வளவு பெரிய இந்தச் சுமையைச் சுமப்பது சாத்தனுக்கு ஒரு விளையாட்டு" என்றால் அவ்விடத்தில், "விளையாட்டு" என்பதற்கு ஒரு வருத்தமும் இன்றி எளிதாக அந்தச் சுமையை அவன் சுமக்கின்றான் என்று பொருள்கொள்ளுதல் போல, மாயையினின்றும் இவ்வுலகைப் படைத்தல், காத்தல் முதலிய தொழில்களை இறைவன் ஒரு வருத்தமும் இன்றி மிக எளிதாகச் செய்கின்றான் என்று மணிவாசகப் பெருமான் திருவாக்கிற்குப் பொருள் செய்யவேண்டும். திருமுறைகளிலும் சித்தாந்த நூற்களிலும் வேறுபல இடங்களிலும்வரும், "விளையாட்டு" என்னும் சொல்லிற்கு, "உயிர்களின் பொருட்டு-அவை மகிழ்வதற்காகத் திருவிளையாட்டுச்செய்து" என்றும் பொருள்கொள்ளலாம். சைவ சித்தாந்தம் உயிர்கள் யாராலும் உண்டாக்கப்படாத அநாதி நித்தியப் பொருட்கள் என்றும், தனக்கென ஒரு தேவையும் இல்லாத இறைவன் அவைகளின் பொருட்டே செயல்கள் புரிகின்றான் என்றும் கொள்கிறது. எனவே, ஒரு காரணமும் இன்றித் திருவிளையாட்டாக இறைவன் உயிர்களையும் உலகையும் உண்டாக்குகின்றான் எனக் கூறுபவர்கள், திருமுறைகளையோ சித்தாந்த நூற்களையோ தமக்கு ஆதாரமாகக் காட்ட முடியாது என்பது இதனால் நன்கு விளங்கும்.

இனிச் சைவ சித்தாந்தம் கொள்கின்ற முப்பொருள் உண்மையை—அஃதாவது "இறை, உயிர், தளை" என்னும் முப்பொருட்களும் யாராலும் உண்டாக்கப்படாமல் அநாதி நித்தியமாக உண்டு என்னும் கொள்கையை—ஒப்புக்கொள்ளாமல், "இருப்பது பிரமம் ஒன்றே ; வேறு பொருட்களே இல்லை" எனக் கூறும் சங்கரர் வேதாந்தம்பற்றிச் சிறிது ஆராய்வோம். (தொடரும்)

திரு. என். இராமமூர்த்தி, திரு. ந. இ. லிங்கம் முதலிய அன்பர்கள் பலரும் கலந்து கொண்டனர். காலை 10 மணியளவில் பழையனூர்க் கோயிலில் வழிபாடு நிகழ்ந்தது. பழையனூர்ப் பொதுமக்கள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் அவர்களையும், ஏனைய அடியார் திரளையும் மிகுந்த பக்தி சிரத்தையுடன் வரவேற்றனர். திரு. சுந்தர முதலியார் அவர்கள், அன்பர்கள் அனைவருக்கும் சிற்றுண்டியும் சுவை நீரும் கொடுத்து உபசரித்தார். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் பழைய னூர்ப் பொதுமக்களின் விருப்பத்திற்கு இணங்க இனியதொரு ஆசியுரை வழங்கியருளினார்கள். பின்னர்த் திருவாலங்காட்டில் வழி பாடு சிறப்புற நிகழ்ந்தது. பிற்பகலில் நிகழ்ந்த சமயப் பேரவைச் சொற்பொழிவுகளுக்குச் சைவப்பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி. அவர்கள், தலைமை தாங்கினார்கள். திரு. சபாபதி தேசிகர் அவர்கள் இனியதொரு வரவேற்புரை வாசித்தளித் தார். திருவாளர்கள் க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி., குடந்தை - எஸ். டி. பாலு, ஏகாம்பர முதலியார், எம்.எல்.ஏ., புலவர் - முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்., ஊராண்மைக் கழகத் தலைவர் - திருமலைப் பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் ஆசியுரையும், தலைவர் அவர்களின் முடிவுரையும் நிகழ்ந்தது.

> "நற்றி றம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்
> துற்ற போதுதம் உயிரையும் வணிகனுக் கொருகால்
> சொற்ற மெய்ம்மையும் தூக்கிஅச் சொல்லையே காக்கப்
> பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு"

எனச் சேக்கிழார் புகழும் வண்ணம் இயம்புமொழி காப்பதற்காக உயிர் கொடுத்த பழையனூர் உத்தமர்களின் நினைவுச் சின்னத் தினையும், சாட்சிபூதேஸ்வரர் கோயிலினையும் புதுப்பித்துப் போற்ற வேண்டிய இன்றியமையாமையினை ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளும் தலைவர் அவர்களும் பிறரும் வலியுறுத்தினர். திரு. ச. சிவகுமாரனார் அவர்கள் அனைவர்க்கும் இனியதொரு நன்றியுரை நவின்றார். விழாவுக்கு வந்திருந்த அன்பர்களுக்கெல்லாம் நண்பகலுணவும், பிற்பகற் சிற் றுண்டியும் முறையே திரு. கைவண்டூர் - ராஜு முதலியார் அவர் களாலும், திருவாலங்காடு - சபாபதி தேசிகர் அவர்களாலும் சிறந்த

[illegible]யில் வழங்கப்பெற்றன. அடுத்த மாதாந்தர வழிபாட்டுக் [illegible] திருவிற்கோலம் (கூவம்), திருஇலம்பையங்கோட்டூர் [illegible] தலங்களில் 1–5–60 ஞாயிறன்று நடைபெறும். அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு மகிழலாம்.

**சிவஞானபோத விரிவுரைப் பெருவிழா :** சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் ஆசிரியர் திரு. இளவழகனர் அவர்கள் வாரந்தோறும் தொடர்ந்து பல ஆண்டுகளாக நடத்தி வந்த சிவஞான சித்தியார் விரிவுரை நிறைவு விழாவினை யொட்டி, 24-4-60 முதல் 7-5-60 வரையில், டாக்டர் குருசாமி முதலியார் தொண்ட மண்டலம் உயர்நிலைப்பள்ளியிற் சிறப்புற நிகழ விரிவான ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றன. சமயவுணர்வும் ஆர்வமும் உடையோர் அனைவரும் தலைநகரில் நிகழும் இம்மாபெரும் விழாவில் கலந்து கொண்டு பயன் எய்தலாம்.

**திருக்கழிப்பாலை வாரவழிபாட்டுச் சங்கம் :** மூன்றாவது ஆண்டு விழாவினை யொட்டிச் சிதம்பரம் மாலைகட்டித் தெரு சாதுக் கூடத்தில் 9-5-60 முதல் 20-5-60 வரையில் சாத்திர தோத்திரப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களான திருவாளர்கள் சி. இராமலிங்கம், எம்.ஏ., சுந்தரேச வாண்டையார், வீ. உலகவூழியர், இ. எஸ். வரதராஜ ஐயர், எஸ். சீனிவாசன், அ. நடேச முதலியார், ந. சிவப்பிரகாச தேசிகர், ச. தண்டபாணி தேசிகர், க. வெள்ளைவாரணனர் ஆகியவர்களும், சச்சிதானந்த தீட்சிதர், டாக்டர் பு. வே. தேவராஜ முதலியார், பு. உ. கே. நடராஜப்பிள்ளை ஆகியவர்களும் சித்தாந்த சாத்திரங்களைப் பற்றிய விரிவுரைகளை நிகழ்த்துவர். நிறைவுவிழாவுக்குத் திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., பி.எல். அவர்கள் தலைமை தாங்குவார்கள்.

---

Printed at the Sadhu Press, 15. Madhava Perumal Koil Street, Mylapore by D. Mangayarkarasi and V. K. Punithavathi. Edited by Pulavar Murugavel, M.A., M.O.L. & Published by S. Satchidanandam Pillai, B.A., L.T. for the Saiva Siddhanta Maha Samajam, 14, Warren Road, Mylapore, Madras-4.